## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 418/2024**

திருமதி. கோவிந்தம்மாள் (P.W. –1) **09.03.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. தமிழில் கையொப்பம் செய்வீர்களா என்றால் ஆமாம். தாவா சொத்து யார் யாரிடமிருந்து கிரயம் பெற்றார்கள் என்றால் பூர்வீக சொத்துக்கள். என்னுடைய சித்தப்பாவிற்கு ஆறு ஏக்கர் என்னுடைய அப்பாவிற்கு 6 ஏக்கர் பாத்தியம் என்று சாட்சி தனிச்சையாக முன்வந்து கூறுகிறார். சித்தப்பா பெயர் நாச்சிமுத்து என்றால் ஆமாம். தாவா எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் மோசடியாக என்னிடம் சொத்தை பொறுத்து கையொப்பம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன்.

2. வேறு என்ன பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டுள்ளேன். 1,2 பிரதிவாதிகள் ஏற்படுத்திக் கொண்டதாக சொல்லும் ஆவணம் 1998 ஆம் ஆண்டு என்றால் சரி. அந்த ஆவணத்தில் ஏற்பட்டுள்ள கையொப்பங்களை ஆட்சேபனை செய்கிறீர்களா என்றால் இல்லை. மற்ற இரு வாதிகளும் அந்த ஆவணத்தில் உள்ள கையொப்பங்களை மறுக்கவில்லை என்றால் ஆமாம். தாவா வழக்குரையின்படி பணம் கடன் பெறுவதற்காக கையொப்பம் செய்வதாக அழைத்துச் சென்று சொத்தை ஏமாற்றி விட்டதாக சொல்கிறீர்களா என்றால் ஆமாம்.

3. நாச்சிமுத்து எவ்வளவு கடன் யாரிடம் எந்த தேதியில் பெற்றார் என்றால் அதன் விபரங்கள் எனக்குத் தெரியாது. நாச்சிமுத்து, முதல் பிரதிவாதிக்கு தான் தெரியும். இந்த விபரங்களை தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. அவ்வாறு ஏமாற்றப்பட்டதை பொறுத்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். அதற்கு ஆதாரங்கள்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. உரிமையியல் வழக்கு என்பதால் நீதிமன்றத்திற்கு செல்லுமாறு சொன்னார்கள்.

4. புகார் மனுவின் நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு, தாக்கல் செய்துள்ளேன். 1998 ஆம் வருடம் ஆவணம் ஏற்பட்ட பிறகு மூன்று வருட காலத்திற்குள் அதைப்பற்றி நாச்சிமுத்துவிடுமோ முதல் பிரதிவாதிகளிடமோ சென்று கேட்டீர்களா என்றால் கேட்டேன் அடிக்கடி கேட்டேன். கிரைய ஆவணம் ஏற்பட்ட தேதியிலிருந்து தாவா தாக்கல் செய்யும் வரை கேட்டேன். தாவா சொத்தைப் பொறுத்து எங்களுக்குள்ள உரிமையை முறையான இறுதி பிரயோஜனம் பெற்றுக் கொண்டு பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஏற்படுத்திக் கொண்ட பிறகு 25 வருடங்கள் கழித்து பொய்யான சங்கதிகள் உடன் தவறான தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையில் ஆவணம் மோசடியாக ஏற்பட்டிருந்தால் சரியான சட்ட வரம்பு காலத்திற்குள் நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தின் மதிப்பு உயர்ந்து விட்டதால் வேண்டுமென்றே பொய்யான சங்கதிகளை எடுத்துரைத்து பொய் வழக்கு தாக்கம் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு.

5. தாவா சொத்து தற்சமயம் 10 கோடி மதிப்பு என்றால் தவறு 100 கோடி மதிப்பு. 100 கோடி ரூபாய் மதிப்புடைய சொத்து உரிய பரிகாரம் கேட்பதற்கு இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது தவறு என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து தற்போது பிரதிவாதிகள் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டு அவருடைய சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றால் சரி. நாங்களும் அனுபவம் செய்து வந்தோம் தாவா தாக்கல் செய்த பிறகு எங்களை தாவாசத்திற்குள் விடாமல் தடுத்து விட்டார்.

6. தாவா சொத்தைப் பொறுத்து ஆவணம் ஏற்பட்ட தேதியிலிருந்து முதல் பிரதிவாதி தாவா சொத்தின் சுவாதினத்தில் இருந்து வருவதால் அது அவருடைய தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அதனால் தாவா சொத்திற்குள் என்னை அவர் விட வேண்டிய அவசியமே இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கூட்டு

சுவாதீனத்தில் நான் இல்லை என்றால் தவறு. கூட்டு சுவாதீனத்தில் தான் உள்ளேன். தாவா பரிகாரங்கள் சரியான சட்ட வரம்பு காலத்திற்குள் கோரப்படவில்லை என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணங்கள் சரியானவை என்றால் தவறு. தாவா செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2026.03.09 12:53:45 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.